05.11.2024

OS No: 187/2021

வா.சா. 1 திரு. பெரியணன்

**குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி கருத்தசாமி எனது அப்பா. 2ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரர். தாவா சொத்தின் சர்வே எண். 50/2. எனது அப்பா கருத்தசாமிக்கு படிக்க தெரியாது. எனது தந்தையார் ஆரம்பத்தில் கூலி வேலை செய்து வந்தார், ஆடு மாடுகள் இருந்தது. நான் 2006 ஆம் ஆண்டு கடைசியில் வெளிநாடு சென்று வந்தேன். நான் வெளிநாடு செல்வதற்கு முன்பாக நான் கூலி வேலை , விவசாயம் செய்து வந்தேன். நான் வெளிநாடு செல்வதற்கு பணம் என் தந்தையும் சகோதரரும் கட்டினார்கள் என்றால் சரியல்ல நான் தான் செலவு செய்து சென்றேன். நான் வெளிநாடு செல்வதற்கு என் தகப்பானார் தான் அவர் வைத்திருந்த வெள்ளாடுகளை விற்று பணம் செலுத்தினார் என்றால் சரியல்ல . நான் வெளிநாடு செல்லும் சமயத்தில் என் அப்பா 200 செம்பறி ஆடு, 100 வெள்ளாடு, 4 உழவு மாடுகள், 10 பசு மாடுகள் வைத்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல அவர் 100 நாள் வேலைக்கு தான் சென்று வந்தார் . நான் கத்தார் நாட்டில் சுமார் 4 வருடங்கள் இருந்தேன். நான்வெளிநாட்டில் இருந்து என் தந்தையாருக்கு பணம் அனுப்பியதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. நான் வெளிநாட்டிற்கு சென்று குடித்துவிட்டு பணத்தினை அழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. கத்தார் நாட்டிலிருந்து வந்த பின்னார் துபாய் நாட்டிற்கு சென்றேன். நான் துபாய் நாட்டிற்கு செல்வதற்கும் என் அப்பா தான் பணம் செலுத்தினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை என் அப்பா 2008 ல் வாங்கினார். 21.04.2010 ல் என் அப்பா பில்லான் என்பவரிடம் சொத்தினை அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. என் சகோதரி ஆறுமுகராணிக்கு அடமானம் வைத்த பணத்தினை வைத்து தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. 21.04.2010 ல் அடமானம் வைத்திருந்த சொத்தினை

11.06.2010 ல் என் அப்பா திருப்பினார் என்றால் சரியல்ல நான் தான்அடமானத்தினை மீட்டேன். என் தந்தை தான் அவர் வைத்திருந்த ஆடு மாடுகளை விற்று அடமானத்தினை திருப்பினார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக அடமானத்தினை திருப்பினேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தினை அடமானம் வைத்திருந்த விபரத்தினை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரி. என் தகப்பானார் தாவா சொத்தினை எனக்கு இனாம் செட்டில்மெண்ட் 10.11.2010 எழுதி வைத்தார். நான் வெளிநாடு செல்வதற்கு பணம் தேவைப்படுகிறது என்றும் சொத்தினை அடமானம் வைக்க வேண்டும் என்று என் அப்பாவை கூட்டி சென்று மோசடியாக இனாம் செட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு படிப்பறிவில்லாததை பயன் படுத்தி பொய்யாக என் பெயருக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் பழனியப்பன் பஞ்சாயத்து கிளார்க்காக வேலை செய்து வருகிறார். நான் என் அப்பாவை ஏமாற்றி இனாம் செட்டில்மெண்ட் எழுதிய விபரம் எனது தகப்பனாருக்கு 2016 ல் தெரியவந்ததது என்றால் சரியல்ல. என் அப்பா சொத்தினை விவசாய கடனுக்கு எழுதி கொடுப்பதற்காக பத்திரத்தினை பார்த்த போது வில்லங்க சான்றிதழை பார்த்த போது இனாம் செட்டில்மெண்ட் விபரம் தெரிய வந்ததது என்றால் சரியல்ல. என் அப்பா இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தினை ரத்து செய்து விட்டார் என்றால் சரிதான். எனக்கு 2013 ல் திருமணம் நடைபெற்றது. என் மனைவியின் ஊர் மேலூர் அருகில் முத்திலாண்டி பட்டி ஆகும். நான் திருமணம் ஆகி 3 வருடம் தான் மேலப்பட்டியில் இருந்தேன் பிறகு என் மனைவியின் ஊருக்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்ற விபரம் கூட 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு கிட்டினி நோய் ஏற்பட்டது தெரியுமா என்றால் அவருக்கு எந்த விதமான கிட்டினி நோயும் ஏற்படவில்லை. என் அப்பாவிற்கு கிட்டினி நோய் ஏற்பட்டு என் அண்ணன் பழனியப்பன் தான் 6 லட்சம் செலவு செய்தார்

என்றும் நான் மேலப்பட்டியில் இல்லாததால் அந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் தற்போது சிங்கம்புணரியில் 6 வருடமாக இருக்கிறேன் . என் அப்பா டீ குடிக்க சாலையை கடக்கும் போது அவர் மீது நான்கு சக்கர வாகனம் மோதி அவரது கால் முறிவு ஏற்பட்டது எனக்கு தெரியுமா என்றால் நான் தான் அவரை சிகிச்சைக்கு சேர்த்தேன். அவருக்கு எந்த வருடம் கால் முறிவு ஏற்பட்டது என்றால் சரியாக எந்த வருடம் என்று தெரியாது 2017 ல் ஏற்பட்டது. என் அப்பாவை கால் முறிவு சிகிச்சைக்கு நான் மருத்துமனையில் சேர்க்கவில்லை என்றும் என் அண்ணன் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சரியல்ல. என் சகோதரிக்கு தாயமாமன் முறையை என் சகோதரர் தான் செய்கிறார் நான் எந்த விதமான முறையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா தாவா சொத்தினை என் அண்ணனுக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியாது பின்னார் என் அப்பா எனக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விபரம் 2019 ல் தெரிந்து கொண்டேன். 2016 ல் என் அப்பா இனாம் செட்டில்மெண்ட் என் சகோதரருக்கு எழுதி கொடுத்து தற்போது வரை என் அண்ணன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அண்ணன் தான் தாவா சொத்தில் ஆஸ்பெட்டாஸ் சீட் கூரை அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் தாயார் என் அக்கா 2 பேர் திருமணம் நடைபெற்றவுடன் இறந்து விட்டார். நான் ராசிக்காக பணத்தினை அனுப்பி சொத்தினை என் அப்பா பெயரில் வாங்கினேன் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இனாம் செட்டில்மெண்ட் படி சொத்தின் மதிப்பு சுமார் ரூ11,82,500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு 6 வருடம் கழித்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பிற்குட்படாதது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் மதிப்பினை குறைத்து காட்டி நீதிமன்ற கட்டணத்தினை குறைவாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா

சொத்தினை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும் நாளது தேதி வரை தாவா சொத்து 2 ம் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் என் அப்பாவை ஏமாற்றி எழுதி வாங்கிய இனாம் செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பா சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்றும் நான் வெளிநாடு சென்று அனுப்பிய பணத்தில் வாங்கியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2024.11.05 19:01:40 +0530